செ.வெ.எண். 59/பிப்ரவரி தேதி : 22.02.2017

# தருமபுரி மாவட்டத்தில் நுண்ணீர் பாசன திட்ட செயலாக்கம் மற்றும் வறட்சி நிவாரணம் தொடர்பான பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



தருமபுரி மாவட்டம், இணை இயக்குநர் (வேளாண்மை) அலுவலகத்தில் 2016-17-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வரும் நுண்ணீர் பாசன திட்ட செயலாக்கம் மற்றும் வறட்சி நிவாரணம் தொடர்பான பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நடப்பு ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் நுண்ணீர் பாசன திட்டத்தினை செயல்படுத்த வேளாண் துறை பயிர்களுக்கு 993.0 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைக்கவும், தோட்டக்கலை பயிர்களுக்கு 2968 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைக்கவும், ஆக மொத்தம் 3961 எக்டர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக ரூ. 2724.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுநாள் வரை 2245 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைக்க பணி ஆணை வழங்கப்பட்டு நுண்ணீர் பாசனம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை துரிதரப்படுத்த அனைத்து நுண்ணீர் பாசன நிறுவனங்களின் பிரதிநிதிகள் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டத்தின் போது நிலுவையிலுள்ள இலக்கினை 15.03.2017-க்குள் சாதனையடையும் வகையில் தகுதி வாய்ந்த பயனாளிகளினை தேர்வு செய்து டான்கோடா வளைதளத்தில் உரிய பதிவுகள் மேற்கொண்டு முழுமையான விண்ணப்பங்களை ஒப்புதலுக்கு அனுப்பி, பணியாணை பெற்று காலத்தே பணியினை முடித்திடுமாறு துறை அலுவலர்களுக்கும் நுண்ணீர் பாசன பிரதிநிதிகளுக்கும் அறிவுரை வழங்கினார்.

நுண்ணீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயனடையும்படி விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். மேலும் வறட்சி நிவாரணம் வழங்குவது தொடர்பாக பயனாளிகளின் வங்கி கணக்கு விபரம் சரிபார்க்கும் பணி குறித்து வருவாய் கோட்ட அலுவலர்,வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை அலுவலர்களுடன் ஆய்வின்போது பணியினை துரிதபடுத்தி விரைந்து முடிக்கும்படி மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி. கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி. சுசீலா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.